शिवाष्टोत्तरशतनामस्तोत्रम्

சிவாஷ்டோத்தரசதநாமஸ்தோத்ரம்



வெளியீடு
ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்

शिवाष्टोत्तरशतनामस्तोत्रम्

சிவாஷ்டோத்தரசதநாமஸ்தோத்ரம்

பாஸ்கரராயர் இயற்றிய
ரத்நாவாலம் என்னும் உரையையும்,
ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர் இயற்றிய
வியாக்யானத்தையும் ஆதாரமாகக் கொண்டு
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

மொழிபெயர்ப்பு

Dr. T. GANESAN
SENIOR RESEARCHER IN SAIVASIDDHANTA
FRENCH INSTITUTE,
PONDICHERRY.

வெளியீடு :
ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்

நூல் விளக்கக் குறிப்பு

வெளியீடு எண்	:	10
நூல் பெயர்	:	சிவாஷ்டோத்தரசதநாமஸ்தோத்ரம்
ஆசிரியர்	:	T. கணேசன்
மொழி	:	ஸம்ஸ்கிருதம், தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2008
பிரதிகள்	:	500
தாள்	:	Dy. 8 kg. மேப்லித்தோ
நூல் அளவு	:	Dy. 1/8.
எழுத்து	:	13 புள்ளி
பக்கங்கள்	:	56
வெளியீடு	:	ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்

நூல் கிடைக்கும் இடம் :

ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்
1/42, அக்ரஹாரம், பெருமாள் கோவில் தெரு,
நயினார்கரம் - 627 804, தென்காசி தாலுகா.

முன்னுரை

சிவபெருமானின் குணநலன்களைப் போற்றிப்பாடி அவன் திருவடிகளையே நினைந்து பிறவிப்பயன் பெறுவதற்கு எண்ணற்ற தோத்திரங்களும், பாடல்களும் நமது பாரதநாட்டின் அனைத்து மொழிகளிலும் உள்ளன. அவற்றிற்கெல்லாம் முதலாவதாகத் திகழ்வன வேதங்கள். பரமேசுவரனைத் தொழுது அவனுடைய குணங்களைப் போற்றும் முறையை வேதங்களே நமக்குக் கற்றுத்தருகின்றன. சிவபெருமானின் முன்னூறு திருநாமங்களை (ருத்ரத்ரிசதீ) எட்டு அனுவாகங்களில் முதன்முதலில் நமக்குத் தருவது கிருஷ்ணயஜுர்வேத ஸம்ஹிதையின் ஸ்ரீருத்ராத்தியாயம், அவற்றின் வழியில் முனிவர்களும், அருளாளர்களாகிய நாயன்மார்களும், மற்றும் பல அடியார்களும் தங்களுடைய இறையனுபவத்தைப் பாக்களில் வடித்துத் தந்துள்ளனர். மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி சிவானுபவத்தை எளிதில் பெற்றுத் தர இந்த நூல்கள் மட்டுமே போதும் எனக் கூறினால் அது மிகையாகாது.

அந்த வகையில் பக்திநெறி ஒன்றையே பரப்புவதற்காக எழுந்த புராணங்கள் கணக்கற்ற தோத்திரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. அவற்றுள், சிவபெருமானின் கணக்கிலடங்கா மஹிமைகளை வரிசைப்படுத்தும் ஓராயிரம் திருநாமங்களை ஸஹஸ்ரநாமதோத்திரம் என்றும், பெருமானின் நூற்றெட்டுத் திருநாமங்களைக் கூறும் தோத்திரங்களை அஷ்டோத்தரசதநாமஸ்தோத்திரம் என்றும் அழைப்பது மரபு. மஹாபாரதம், மற்றும் புராணங்களில் எட்டு சிவஸஹஸ்ரநாமஸ்தோத்திரங்கள் கூறப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் இவை தோத்திரங்களாக மட்டுமே இருந்து வந்துள்ளன. வீடுகளில் நித்தீய பூஜைகளிலும், ஆலயங்களிலும் இந்த தோத்திரங்களைப் பக்தியுடன் பாராயணம் செய்வது தொன்றுதொட்டு வரும் வழக்கம். அவற்றையே ஒவ்வொரு திருநாமத்தையும் அர்ச்சனை செய்வதற்குப் பயன்படுத்துவது

சற்றுப் பிற்காலத்தில் தோன்றிய மரபு என்று கொள்ள இடமுண்டு. கிரஹங்களையும் தெய்வங்களையும் மகிழ்விப்பதற்காகவும், நாட்டில் மழையின்மை, வறட்சி ஆகிய காலங்களில் மழை பெறுவதற்காகவும் சுபிக்ஷம் நிலவுவதற்காகவும் இந்த ஸஹஸ்ரநாமஸ்தோத்திரங்களை தினந்தோறும் தனியாகவோ அல்லது கூட்டாக அமர்ந்தோ பாராயணம் செய்யும்படி சாந்திகுஸீமாகரம் மற்றும் சரகஸம்ஹிதை முதலிய மிகப் பழமையான நூல்களில் கூறப்படுகின்றன.

சிவபெருமானின் நூற்றெட்டுத் திருநாமங்களைத் தோத்திரமாக நமக்கு வழங்கும் இந்த சிவாஷ்டோத்தரசத நாமஸ்தோத்ரம் பதினெட்டு உபபுராணங்களுள் மிக முக்கியமானதான ஸ்கந்தபுராணத்தின் சங்கரசம்ஹிதையில் சிவரஹஸ்யகண்டமெனும் பாகத்தில் அமைந்துள்ளது.

பதினெட்டு மஹாபுராணங்களுள் மிகப் பெரியது ஸ்கந்தபுராணம்; அது நாகரகண்டம், வைஷ்ணவகண்டம், அம்பிகாகண்டம், பிரபாஸகண்டம் முதலான ஏழு பெரும் பிரிவுகளைக் கொண்டது. சதுர்வர்க்கசிந்தாமணி போன்ற வட இந்தியாவில் தோன்றிய ஸ்மிருதி நிபந்தநூல்களில் இந்த ஸ்கந்தபுராணத்திலிருந்து தான் பெரும்பான்மையான மேற்கோள்கள் எடுத்தாளப்படுகின்றன. உபபுராணங்களுள் ஒன்றான ஸ்கந்தபுராணம் ஆறு ஸம்ஹிதைகளைக் கொண்டது. அவை முறையே ஸநத்குமாரஸம்ஹிதை, ஸௌதஸம்ஹிதை, ப்ராஹ்மீஸம்ஹிதை, வைஷ்ணவ ஸம்ஹிதை, சங்கரஸம்ஹிதை, ஸௌரஸம்ஹிதை என்பன. இது முழுவதும் சிவதர்மங்களையும், சிவபெருமான் முருகப் பெருமான் தொடர்பான கதைகளையும், சிவபக்தியின் மாட்சிமையையும், திருநீற்றின் மஹிமை, ருத்ராக்ஷ மஹிமை, முதலிய செய்திகளையும் கொண்டது. எண்பத்தோராயிரத்து நூறு கிரந்தங்களால் ஆனது. இவற்றுள் ஸௌதஸம்ஹிதை தொன்று தொட்டே தமிழுலகில் சைவர்களால் பெரிதும் போற்றிப் பயிலப்பட்டு வருகிறது.

சிவாஷ்டோத்தரசதநாமஸ்தோத்ரம்

சங்கரஸம்ஹிதையின் ஒரு பாகமான சிவரஹஸ்யகண்டத்தில் மஹாவிஷ்ணுவானவர் பார்வதிதேவியான கௌரிக்கு உபதேசிப்பதாக இந்த சிவாஷ்டோத்தரசதநாமஸ்தோத்ரம் காணப்படுகிறது. பார்வதிதேவி சிவபெருமானின் திருவுடலில் பாதியைத் தான் பெறவேண்டி ஏற்கெனவே சங்கரநாராயண வடிவமாகச் சிவபெருமானின் திருமேனியில் பாதியைப் பெற்ற நாராயணரிடம் உபாயம் கேட்க, அதற்கு விஷ்ணுவானவர் இந்த சிவாஷ்டோத்தரசதநாமமெனும் அளவிடற்கரிய மஹிமை பொருந்திய தோத்திரத்தை உபதேசிக்கிறார். தேவியும் ஒருவருடகாலம் மிகுந்த பக்தியுடன் தினமும் மூன்று வேளையும் பாராயணம் செய்து சிவபெருமானின் திருவருளால் பெருமானின் பாதி மேனியைத் தான் பெற்றாள். எனவே, இத்தோத்திரத்தை மிகுந்த பக்தியுடன் பாராயணம் செய்வோருக்கு சிவபெருமான் திருவருளால் அனைத்து மங்கலங்களும் கிட்டும் என்பது உறுதி.

ஏனைய சமயத்தவர்கள் சைவத்தை அழிக்க முற்பட்ட காலத்தில் தோன்றி சிவபெருமானின் மஹிமையையும், மற்றெல்லாத் தெய்வங்களினும் சிவபெருமான் மேன்மையானவர் என்பதையும் உலகோர் அனைவரும் அறிந்துய்யும் பொருட்டுப் பல நூல்களை இயற்றிச் சைவத்தை நிலைநாட்டியவர் சிவபக்திச் செல்வரான அப்பையதீக்ஷிதர் என்னும் மஹான். 16 ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவருடைய இளைய சகோதரரின் பெயரரான நீலகண்டதீக்ஷிதர் என்னும் மற்றொரு சிவபக்தசிகாமணி சைவத்தின் மேன்மையையும், சிவபெருமானின் அளவிடற்கரிய பெருமைகளையும் நாம் உணரும் நோக்கத்துடன் இந்த சிவாஷ்டோத்தரசதநாம ஸ்தோத்திரத்திற்கு சிவதத்வரஹஸ்யம் என்னும்

ஓர் அரும்பெரும் உரையை வகுத்துள்ளார். இவர் 17 ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; மதுரையை ஆண்ட திருமலைநாயக்க மன்னருக்கு அமைச்சராக இருந்தார். உரைகாரர் தன்னை சிவதாஸர் என்று மிகப் பணிவுடன் கூறிக்கொள்கிறார்.[1] இவ்வுரையில் ஒவ்வொரு நாமத்தையும் விரிவாக விளக்கி அதன் பலதிறப்பட்ட பொருள்களையும் வேதம், ஸ்ரீருத்ரம், ஸ்மிருதி நூல்கள், பாணினி வியாகரணம், காமிகம் முதலான சைவ ஆகமங்கள் அதிலும் குறிப்பாக வாதுலசுத்தாக்கியம் என்னும் ஆகமம், மற்றும் பல புராணங்களிலிருந்தும் மிகுதியான மேற்கோள்களை எடுத்து விளக்கம் தந்திருக்கிறார். எண்ணற்ற சைவக்கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட இந்த உரை சைவமக்களால் பெரிதும் படித்துப் பொருள் உணர்ந்து சிவானந்த இன்பம் பெறவேண்டிய உத்தமமான நூல். இந்தத் தோத்திரத்தை உரையுடன் படிப்போருக்குச் சிவபக்தி மேலும் வளர்ந்து பெருகும் என்பது திண்ணம்.

ஒரே ஒருமுறை இந்த உரை ஸ்ரீரங்கம் வாணீவிலாஸ அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டு 1915 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

வடமொழி அறியாதவர்களும் சிவபெருமானின் இத்திருநாமங்களின் பொருள்களைச் சிறிதேனும் உணர்த்தற் பொருட்டு அவற்றிற்கு இந்த உரையின் துணைகொண்டு ஓர் எளிய தமிழ் மொழிபெயர்ப்பைச் செய்துள்ளேன். இந்த உரையின் ஓலைச் சுவடியொன்று புதுவைப் பிரெஞ்ச் இந்திய ஆராய்ச்சி நிறுவனத்தில் (French Institute, Pondicherry) உள்ளது. உரை முழுவதும் மேற்படி சுவடியின் துணை கொண்டு திருத்திய பதிப்புடன் அச்சிடப்பட்டு

---

[1] निर्मिता शिवदासेन नीलकण्ठेन यज्वनाः ।
शिवतत्त्वरहस्याख्या शिवयोः प्रीतये कृतिः ॥

மீண்டும் வெளிவரவேண்டும் என்பது அடியேனுடைய அவா. ஏனெனில், அப்பைய தீக்ஷிதர் இயற்றிய சிவதத்துவவிவேகம், ராமாயண தாத்பரியசங்கிரஹம், பாரததாத்பரியசங்கிரஹம், சிவகர்ணாமிர்தம் முதலிய சில சைவநூல்கள் யாழ்ப்பாணத்து சபாபதி நாவலர் அவர்களாலும், மாதவச் சிவஞானசுவாமிகளாலும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆனால், நீலகண்ட தீக்ஷிதரின் சைவ நூல்கள் எதுவும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. சிவபெருமான் மதுரையில் ஆற்றிய அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும், மீனாட்சி திருக்கல்யாணம் ஈறாக வடமொழியில் சிவலீலார்ணவம் என்னும் ஒரு மிகச் சிறந்த காவியமாகப் பாடியுள்ளார் நீலகண்டதீக்ஷிதர். சிவபெருமானின் எட்டு வீரச் செயல்களுள் ஒன்றான அந்தகாஸீரவதத்தைக் கருப்பொருளாகக் கொண்டது நீலகண்டவிஜயசம்பூ என்னும் இவரியற்றிய மற்றுமொரு காவியம். சிவபெருமான் ஒருவரே எல்லாக் கடவுளரிலும் மேன்மையானவர்; உயர்ந்தவர், பரம் பொருள் என்று நிறுவுவதே சிவோத்கர்ஷமஞ்ஜரி என்னும் சிவத்தோத்திரம்.[2] இவை யாவும் நீலகண்டதீக்ஷிதரியற்றிய சைவ நூற்பொக்கிஷங்கள்.

அடுத்து, 17 ம் நூற்றாண்டில் மஹாராஷ்டிரத்தில் பிறந்து, பின்னர் தஞ்சை மராட்டிய மன்னர்களால்

---

[2] சிவபெருமானின் குணங்களையும், தெய்வீகச் செயல்களையும் முதல் மூன்று வரிகளில் பட்டியலிட்டுக் கூறிவிட்டு அப்படிப்பட்டவரே எனது ஒரே தெய்வம்; ஏனையோர்கள் வேதம் முதலியவற்றில் கடவுளர்களாக மதித்துக் கூறப்படவே இல்லை என்று நான்காவது வரியில் ஒவ்வொரு செய்யுளிலும் ஆணித்தரமாகக் கூறுவது இந்த தோத்திரத்தின் தனிச் சிறப்பு: स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते। என்னும் வரி ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் காணப்படுகிறது.

போற்றப்பட்டுத் திருவிடைமருதூரில் வாழ்ந்தவரும், ஸ்ரீவித்யா சம்பிரதாயத்தின் புகழ் பெற்ற நிபுணரும், தேவியின் பக்தரும், பல சாத்திரங்களில் தேர்ச்சி பெற்றவரும், பல சாத்திர நூல்களை இயற்றியவருமான ஸ்ரீபாஸ்கரராயமகீ என்னும் பாஸ்கரராயர் இந்த சிவாஷ்டோத்தரசதநாம ஸ்தோத்திரத்திற்குச் செய்யுள் வடிவில் ஒவ்வொரு திருநாமத்திற்கு ஒரு செய்யுள் வீதம் நூற்றெட்டுப் பாக்களில் ரத்னாவாலம் எனப் பெயர் கொண்ட ஒரு சிறந்த உரையை வரைந்துள்ளார். இதுவும் ஒரு மிகச் சிறந்த உரை; நீலகண்டதீக்ஷிதரின் வியாக்கியானத்தைப் போன்றே வேதம், புராணம், இதிஹாஸம் முதலிய பல நூல்களின் அடிப்படையில் அந்நூல்களின் கருத்துக்களை மிகத் தெளிவாக எடுத்தாண்டு இந்த உரையை பாஸ்கரராயர் வரைந்துள்ளார். ஒரே சுலோகத்தில் ஒரு திருநாமம் தொடர்புடைய அனைத்துக் கருத்துக்களையும் மிகத் தெளிவாக விளக்குகிறார். நீலகண்டதீக்ஷிதரின் உரையும் பாஸ்கரராயரின் உரையும் பல இடங்களில் ஒத்த கருத்துடையனவாக விளங்குகின்றன.

பாஸ்கரராயரின் உரையும் பல வருடங்களுக்குமுன் ஒரு முறை அச்சாகியுள்ளது. அந்த உரையையும் இத்துடன் சேர்த்துப் பதிப்பிப்பது சைவ அன்பர்களுக்கு பேருதவியாயிருக்கும் என்று எண்ணுகிறேன். பாஸ்கரராயரின் இந்தச் செய்யுள்வடிவிலமைந்த உரைக்குப் 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேங்கடபதி என்பவர் வகுத்த ஸீதாபூரம் என்னும் பெயர் கொண்ட மிக விரிவான மற்றதோர் உரையும் உள்ளது. மைசூர் கீழ்த்திசை நூல்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக 1984 ம் ஆண்டு முதன் முறை பதிப்பிக்கப்பட்டது.

இத்தகு பெருமையும் மஹிமையும் வாய்ந்ததும் பல நூற்றாண்டுகளாகத் தென்னிந்தியாவில் சைவமக்களால்

போற்றப்பட்டுவருவதுமான சிவாஷ்டோத்தரசத நாமஸ்தோத்திரத்தை அதன் பொருளுணர்ந்து தினமும் பாராயணம் செய்யுமாறு ஒரு நூல் வெளியிட வேண்டும் என்ற எனது பேரவாவை திருநெல்வேலி சிவ வித்யாசங்கர சிவாச்சார்யர் அவர்களிடம் ஒருமுறை கூறினேன். அவர்களும் தன் குமாரனின் திருமணத்தையொட்டி வெளியிடலாமென்ற தனது என்ணத்தை வெளிப்படுத்தினார்கள். அதன்படி அவர்களது திருமகனாரின் திருமணத்தையொட்டி இந்நூல் வெளிவருகிறது. இது வகைக்கு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கும் பொருளுதவிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு புதுமணத்தம்பதிகள் எல்லா நலன்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல க்ருத்திவாஸ பெருமானை என் மன, மொழி, மெய்களால் பிரார்த்திக்கிறேன். இந்நூலை நல்லமுறையில் அச்சிட்டு உதவிய ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுச்சேரி
23.3.2008

சிவத்தொண்டில்
T. கணேசன்



शिवाष्टोत्तरशतनामस्तोत्रकल्पलता

नारायण उवाच

अस्ति गुह्यतमं गौरि नाम्नामष्टोत्तरं शतम्।
शम्भोरहं प्रवक्ष्यामि पठतां शीघ्रकामदम् ॥

अस्य श्रीशिवाष्टोत्तरशतनामस्तोत्रमहामन्त्रस्य नारायण ऋषिः। अनुष्टुप् छन्दः। श्रीसाम्बसदाशिवो देवता। ओं बीजम्। नमः शक्तिः। शिवाय कीलकम्। श्रीसाम्बसदाशिवप्रीत्यर्थे जपादौ विनियोगः।

ध्यानम्

धवलवपुषमिन्दोर्मण्डले सन्निविष्टं
भुजगवलयहारं भस्मदिग्धाङ्गमीशम्।
हरिणपरशुपाणिं चारुचन्द्रार्धमौलिं
हृदयकमलमध्ये सन्ततं चिन्तयामि ॥

ॐ शिवो महेश्वरः शम्भुः पिनाकी शशिशेखरः।
वामदेवो विरूपाक्षः कपर्दी नीललोहितः ॥ १॥
शङ्करः शूलपाणिश्च खट्वाङ्गी विष्णुवल्लभः।
शिपिविष्टोऽम्बिकानाथः श्रीकण्ठो भक्तवत्सलः ॥ २॥
भवः शर्वस्त्रिलोकेशः शितिकण्ठः शिवाप्रियः।
उग्रः कपाली कामारिरन्धकासुरसूदनः ॥ ३॥
गङ्गाधरो ललाटाक्षः कालकालः कृपानिधिः।
भीमः परशुहस्तश्च मृगपाणिर्जटाधरः ॥ ४॥

कैलासवासी कवची कठोरस्त्रिपुरान्तकः ।

वृषाङ्को वृषभारूढो भस्मोद्धूलितविग्रहः ॥ ५ ॥

सामप्रियः स्वरमयस्त्रयीमूर्तिरनीश्वरः ।

सर्वज्ञः परमात्मा च सोमसूर्याग्निलोचनः ॥ ६ ॥

हविर्यज्ञमयः सोमः पञ्चवक्त्रः सदाशिवः ।

विश्वेश्वरो वीरभद्रो गणनाथः प्रजापतिः ॥ ७ ॥

हिरण्यरेतोदुर्धर्षो गिरीशो गिरिशोऽनघः ।

भुजङ्गभूषणो भर्गो गिरिधन्वा गिरिप्रियः ॥ ८ ॥

कृत्तिवासाः पुरारातिर्भगवान् प्रमथाधिपः ।

मृत्युञ्जयः सूक्ष्मतनुर्जगद्व्यापी जगद्गुरुः ॥ ९ ॥

व्योमकेशो महासेनजनकश्चारुविक्रमः ।

रुद्रो भूतपतिः स्थाणुरहिर्बुध्न्यो दिगम्बरः ॥ १० ॥

अष्टमूर्तिरनेकात्मा सात्त्विकः शुद्धविग्रहः ।

शाश्वतः खण्डपरशुरजः पाशविमोचकः ॥ ११ ॥

मृडः पशुपतिर्देवो महादेवोऽव्ययो हरिः ।

पूषदन्तभिदव्यग्रो दक्षाध्वरहरो हरः ॥ १२ ॥

भगनेत्रभिदव्यक्तः सहस्राक्षः सहस्रपात् ।

अपवर्गप्रदोऽनन्तस्तारकः परमेश्वरः ॥ १३ ॥

சிவாஷ்டோத்தரசதநாமஸ்தோத்ரம்

நாராயண உவாச-

அஸ்தி குஹ்யதமம் கௌரி நாம்நாமஷ்டோத்தரம் சதம்
சம்போரஹம் ப்ரவக்ஷ்யாமி படதாம் சீக்ரகாமதம்

அஸ்ய ஸ்ரீசிவஷ்டோத்தரசதநாமஸ்தோத்ரமஹாமந்த்ரஸ்ய நாராயண ரிஷி: அனுஷ்டுப் சந்த: ஸாம்பஸதாசிவோ தேவதா ஓம் பீஜம் நம: சக்தி: சிவாய கீலகம். ஸ்ரீஸாம்பஸதாசிவ ப்ரீத்யர்தே ஜபாதௌ விநியோக:

த்யானம்

தவலவபுஷமிந்தோர்மண்டலே ஸந்நிவிஷ்டம்
புஜகவலயஹாரம் பஸ்மதிக்தாங்கமீசம்
ஹரிணபரசுபாணிம் சாருசந்த்ரார்த்தமௌலிம்
ஹ்ருதயகமலமத்யே ஸந்ததம் சிந்தயாமி

ஓம் சிவோ மஹேச்வர: சம்பு: பிநாகீ சசிசேகர:
வாமதேவோ விரூபாக்ஷ: கபர்தீ நீலலோஹித:
சங்கர: சூலபாணிச்ச கட்வாங்கீ விஷ்ணுவல்லப:
சிபிவிஷ்டோऽம்பிகாநாத: ஸ்ரீகண்டோ பக்தவத்ஸல:
பவ: சர்வஸ்த்ரிலோகேச: சீதிகண்ட: சிவாப்ரிய:
உக்ர: கபாலீ காமாரிரந்தகாஸுரஸூதன:
கங்காதரோ லலாடாக்ஷ: காலகால: க்ருபாநிதி:

பீம: பரசுஹஸ்தச்ச ம்ருகபாணிர்ஜடாதர:

கைலாஸவாஸீ கவசீ கடோரஸ்த்ரிபுராந்தக:

வ்ருஷாங்கோ வ்ருஷபாரூடோ பஸ்மோத்தூலிதவிக்ரஹ:

ஸாமப்ரிய: ஸ்வரமயஸ்த்ரயீமூர்த்திரநீச்வர:

ஸர்வஜ்ஞ: பரமாத்மா ச ஸோமஸூர்யாக்னிலோசந:

ஹவிர்யஜ்ஞமய: ஸோம: பஞ்சவக்த்ர: ஸதாசிவ:

விச்வேச்வரோ வீரபத்ரோ கணநாத: ப்ரஜாபதி:

ஹிரண்யரேதோதுர்தர்ஷெள கிரீசோ கிரிசோ%நக:

புஜங்கபூஷணோ பர்கோ கிரிதன்வா கிரிப்ரிய:

க்ருத்திவாஸா: புராராதிர்பகவாந் ப்ரமதாதிப:

ம்ருத்யுஞ்ஜய: ஸூக்ஷ்மதநுர்ஜகத்வ்யாபீ ஜகத்குரு:

வ்யோமகேசோ மஹாஸேநஜனகச்சாருவிக்ரம:

ருத்ரோ பூதபதி: ஸ்தாணுரஹிர்புத்ந்யோ திகம்பர:

அஷ்டமூர்த்திரநேகாத்மா ஸாத்விக: சுத்தவிக்ரஹ:

சாச்வத: கண்டபரசுரஜ: பாசவிமோசக:

ம்ருட: பசுபதிர்தேவோ மஹாதேவோ%வ்யயோ ஹரி:

பூஷதந்தபிதவ்யக்ரோ தக்ஷாத்வரஹரோ ஹர:

பகநேத்ரபிதவ்யக்த: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்

அபவர்கப்ரதோ%னந்தஸ்தாரக: பரமேச்வர:

அஷ்டோத்தரசதநாம விளக்கம்

ॐ शिवाय नमः ஓம் சிவாய நம:

சிவன் என்னும் சொல் மங்களத்தையும் அழகையும் குறிப்பது. எனவே அப்படிப்பட்ட குணங்கள் பொருந்தியுள்ளதால் பரம்பொருளானது சிவன் என வழங்கப்படுகிறது.

மேலும், எல்லாவற்றையும் அறியும் ஆற்றல் (ஸர்வஜ்ஞத்வம்), எப்போதும் எல்லாம் நிரம்பியிருத்தல் (த்ருப்தி), தொடக்கமில் காலம்தொட்டே பூரணஞானம் உடையவனாயிருத்தல் (அநாதிபோதம்), தனக்குமேல் எவருடைய கட்டுப்பாடும் இல்லாமல் தனிச்சையாகச் செயல்படுதல் (ஸ்வதந்திரம்), ஒருபோதும் குறைவில்லாத ஆற்றல் (அலுப்தசக்தி), எல்லையற்ற ஆற்றல் (அனந்தசக்தி) என்னும் ஆறு தெய்வீககுணங்களையுடையவனாயிருத்தலால் பரம்பொருள் சிவன் என வழங்கப்படுகிறது.

ஆணவம், கர்மம், மாயை என்னும் மும்மலங்களும் அற்றவனாயும், பரிசுத்தனாயும், எல்லா மங்கள குணங்களையும் உடையவனாயிருப்பதால் பரம்பொருளுக்குச் சிவனென்று பெயர்.

இன்னும், இப்பிரபஞ்சத்திற்குக் காரணமாயுள்ள சக்திக்கே ஆதாரமாயிருப்பதாலும், எந்தவிதமாற்றமும் இல்லாதிருப்பதாலும் எல்லா ஜீவராசிகளுக்கும் எப்போதும் நன்மையையே செய்வதாலும் பரம்பொருள் சிவன் என அழைக்கப்படுகிறது.

மேற்கூறிய காரணங்களினால் பரம் பொருளைக் குறிக்கும் மற்றெல்லாப் பெயர்களைக் காட்டிலும் சிவன் என்னும் பெயர் மிகச் சிறந்தது என்று ஆன்றோர்களால் பெரிதும் போற்றப்படுகிறது. 1

ॐ महेश्वराय नमः ஓம் மஹேஸ்வராய நம:

இந்திரன், இயமன் முதலான தேவர்களுக்கெல்லாம் மேலான ஈசுவரனாயிருப்பதால் சிவபெருமான் மஹேசுவரன் எனப்படுகிறார்.

மற்றும், மற்ற தெய்வங்களால் செய்யமுடியாத செயல்களையும் எவ்விதத் தடையும் இன்றிச் செய்யும் ஆற்றல் கொண்டிருப்பதால் மஹேசுவரன் என வழங்கப்படுகிறார்.

மேலும், பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் மேலாய் விளங்குவதாலும், அம்மூவரையும் தோற்றுவிப்பதாலும், மஹேசுவரன் என அழைக்கப்படுகிறார். இம்மஹேசுவரன் சந்திரசேகரன், முதலாக இருபத்தைந்து உருவங்களை உடையவர். இவர் இவ்வுலகம் தோன்றுவதற்கு முதற்காரணமான மாயையைத் தன்வசத்தால் இயக்குபவர். 2

ॐ शम्भवे नमः ஓம் சம்பவே நம:

எல்லா ஜீவராசிகளுக்கும் எப்போதும் நன்மையையே செய்வதால் சம்பு என அழைக்கப்படுகிறார். பெருமான் எப்போதும் ஆனந்தமாயும், எக்காலத்தும் அழிவற்று உள் பொருளாயிருப்பதாலும் அவருக்கு சம்பு என்று பெயர். 3

ॐ पिनाकिने नमः ஓம் பிநாகினே நம:

பிநாகம் என்னும் தெய்வீகமான வில்லை உடையவர். சிவபெருமான் வில்லேந்திய அழகை ஸ்ரீருத்ரம் மிக அழகாக வர்ணிக்கிறது. இந்த நாமத்தின் வாயிலாகச் சிவபெருமானின் உலகைக் காக்கும் தொழில் குறிக்கப்படுகிறது. 4

ॐ शशिशेखराय नमः ஓம் சசிசேகராய நம:

சந்திரனைத் தலையில் சூடியவர். சந்திரசேகரர் என்று அழைக்கப்படும் இந்த மூர்த்தியானது மஹேசுவரரின் இருபத்தைந்து மூர்த்திகளுள் முதலாவது என வாதுலசுத்தம் முதலிய சைவாகமங்கள் கூறும். 5

ॐ वामदेवाय नमः ஓம் வாமதேவாய நம:

அழகானவர் என்பதால் வாமதேவர் எனப் பெருமான் அழைக்கப்படுகிறார். மேலும், உலகத்தாரைப் போலல்லாமல் கபாலம் முதலியவற்றை ஏந்தியிருப்பதாலும் பெருமான் வாமதேவர் என அழைக்கப்படுகின்றார். சிவபெருமான் இவ்வாறு கபாலம் முதலியன ஏந்தியிருப்பது அவர் தோன்றி அழியும் இந்த உலகத்தைக் கடந்து அழியாது என்றும் இருப்பதைக் குறிக்கிறது. இந்த நாமம் வேதத்தில் குறிப்பாக யஜீர்வேதத்தில் மிகவும் போற்றப்படுகிறது. ஸதாசிவனுடைய ஐந்து முகங்களுள் வடக்குநோக்கிய முகமாகவும், பஞ்சபிரஹ்மமந்திரங்கள் எனச் சைவாகமங்களில் மிகவும் போற்றப்படும் ஐந்து மந்திரங்களுள் ஒன்றானதுமாகும். 6

ॐ विरूपाक्षाय नमः ஓம் விரூபாக்ஷாய நம:

உலகிலுள்ள மற்ற உயிரினங்களைப் போலல்லாமல் மூன்று கண்களையுடையவர் என்பதால் விரூபாபாக்ஷர் எனச் சிவபெருமானுக்குப் பெயர். அவ்வாறே, எல்லா உயிரினங்களையும் போல் ஐம்பூதங்களாலான காது, மூக்கு முதலிய மற்ற புலன்களைக் கொள்ளாமல் முழுதும் மந்திரமயமான உடலை உடையவர் என்பதாலும் பெருமான் அவ்வாறு அழைக்கப்படுகிறார். இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்னும் மூன்று சக்திகளே மூன்று கண்களாகக் கொள்ளப்படுகின்றன. 7

ॐ कपर्दिने नमः ஓம் கபர்தினே நம:

ஜடைகளில் முடிச்சுகளை உடையவர். கங்கையைத் தன்னுடைய ஜடையில் தாங்கியவர். இயற்கையாகவே அழுக்குகளே இல்லாத கங்கா பிரவாஹத்தைச் சிவபெருமான் தன்னுடைய ஜடையில் தாங்குகிறார். இயற்கையாகவே புனிதமான கங்கை சிவபெருமானின் ஜடையில் தாங்கப்படுவதால் மேலும் புனிதமடைகிறது. ஸ்ரீருத்ரத்தில் கபர்தீ என்னும் நாமம் பெரிதும் போற்றப்படுவது இங்கு நோக்கத்தக்கது. 8

ॐ नीललोहिताय नमः ஓம் நீலலோஹிதாய நம:

கழுத்தில் நீலநிறமாகவும், உடல் முழுதும் சிவந்த நிறமாகவும் சிவபெருமான் இருப்பதை இந்தப்பெயர் குறிக்கிறது. ஸூர்யமண்டலத்தில் சிவபெருமான் இவ்வண்ணம் இருப்பதையே ஸ்ரீருத்ரம் முதலிய வேதமந்திரங்கள் முழங்குகின்றன. மேலும், அம்மையப்பர் வடிவத்தில் சிவபெருமான் தன்னுடைய இடப்பகுதியில் நீலநிறமாகவும் வலப்பகுதியில் சிவந்தும் காணப்படுவதாலும் பெருமானுக்கு இப்பெயர். 9

ॐ शङ्कराय नमः ஓம் சங்கராய நம:

சுகத்தையும் நன்மையையுமே செய்பவர். சம்பு என்னும் திருநாமத்தின் விளக்கமே இதற்கும் பொருந்தும். 10

ॐ शूलपाणये नमः ஓம் சூலபாணயே நம:

முக்குணங்களாலான மாயையைக் குறிக்கும் திரிசூலத்தைத் தாங்கியவர். 11

ॐ खट्वाङ्गिने नमः ஓம் கட்வாங்கினே நம:

கட்டிலின் அங்கமான அதன் காலைத் தாங்குபவர். இந்த கட்வாங்கம் இச்சை, ஞானம், கிரியை என்னும் மூன்று சக்திகளைக் குறிக்கும். 12

ॐ विष्णुवल्लभाय नमः ஓம் விஷ்ணுவல்லபாய நம:

ஸத்யம், தர்மம், புலனடக்கம், மன உறுதி ஆகிய நற்குணங்களைக் கொண்ட கிருஷ்ணபிரானால் மிகுந்த பக்தியுடன் வழிபடப்படுவதால் சிவபெருமான் விஷ்ணுவுக்கு மிகவும் பிரியமானவர். அவ்வாறு விஷ்ணுவானவர் சிவபெருமானை மிக்க பக்தியுடன் வழிபட்டு ஸுதர்சனம் என்னும் சக்ராயுதத்தைச் சிவபெருமானிடமிருந்து பெற்றார் என்ற கதை. பலபுராணங்களிலும் திருஞானசம்பந்தர் தேவாரத்திலும் கூறப்படுகிறது. 13

ॐ शिपिविष्टाय नमः ஓம் சிபிவிஷ்டாய நம:

உலகத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளின் ஆன்மாவிற்குள்ளும் அவற்றின் தலைவனாக விளங்குபவர். 14

ॐ अम्बिकानाथाय नमः ஓம் அம்பிகாநாதாய நம:

எல்லா உயிர்களுக்கும் அன்னையான பராசக்தியின் நாதன்; அம்மையால் அளவற்ற அன்புகொண்டு போற்றப்படுபவர். அம்மையிடம் அளவற்ற அன்புபூண்டவர். 15

ॐ श्रीकण्ठाय नमः ஓம் ஸ்ரீகண்டாய நம:

காலகூடமென்னும் மிகக் கொடிய விஷத்தை தன் கழுத்தில் தாங்கியவர். பெருமான் இவ்வாறு கொடிய விஷத்தைத் தாங்குதல் மற்ற கடவுளர்களால் செய்யமுடியாத செயலைச் சிவபெருமான் ஒருவரே செய்யும் ஆற்றலைப் பெற்றவர் என்பதை உணர்த்துகிறது. 16

ॐ भक्तवत्सलाय नमः ஓம் பக்தவத்ஸலாய நம:

தன்னுடைய பக்தர்களிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர். 17

ॐ भवाय नमः ஓம் பவாய நம:

இந்த உலகங்கள் யாவற்றுக்கும் தோற்றுவாயாகத் திகழ்பவர்; தோற்றிய உலகங்களுக்கெல்லாம் ஆதாரமாக விளங்குபவர். சிவபெருமானின் எட்டுத் திருநாமங்களுள் இதுவே முதலாவதாக ஆபஸ்தம்பர், போதாயனர், ஆச்வலாயனர் முதலிய முனிவர்களால் இயற்றப்பட்ட கிருஹ்யஸூத்ரங்களிலும், சிவபுராணம் முதலிய புராணங்களிலும், காமிகம் முதலான சைவாகமங்களிலும் போற்றப்படுகிறது. 18

ॐ शर्वाय नमः ஓம் சர்வாய நம:

பிரளய காலத்தில் தோற்றுவித்த எல்லா உலகங்களையும் அழித்து ஒடுக்குபவர். 19

ॐ त्रिलोकेशाय नमः ஓம் த்ரிலோகேசாய நம:

மூவுலகங்களுக்கும் ஒப்பற்ற ஒரே தலைவர். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமெனும் முத்தொழிலையும் ஆற்றுபவர். 20

ॐ शितिकण्ठाय नमः ஓம் சிதிகண்டாய நம:

கழுத்தில் நீலநிறமுடையவர்; இந்திரன் வஜ்ராயுதம் கொண்டு அடித்ததால் கழுத்து நீலநிறமடைந்தது என்பதை இத்திருநாமம் குறிக்கிறது. சக்திவாய்ந்த வஜ்ராயுதம் கூடப் பெருமானிடத்தில் செயலற்றுப் போனதையும் இத்திருநாமம் குறிக்கிறது. 21

ॐ शिवाप्रियाय नमः ஓம் சிவாப்ரியாய நம:

சிவா என்றழைக்கப்படும் அம்பிகைக்கு பிரியமானவர்; ஸர்வவல்லமை பொருந்திய சக்தியையே தனக்கு உடலாகக் கொண்டவர். எனவே சக்தியுடன் எப்போதும் நீக்கமற விளங்குபவர். 22

ॐ उग्राय नमः ஓம் உக்ராய நம:

எல்லா உலகங்களையும் கடந்து எல்லாவற்றிற்கும் மேலாக விளங்குபவர். 23

ॐ कपालिने नमः ஓம் கபாலினே நம:

எண்ணற்ற பிரம்மாக்களுக்குத் தலைவர் என்பதைக் குறிப்பதற்காகப் பிரம்மாவின் தலையோட்டைக் கையில் தாங்குபவர். தொடக்கமில் காலந்தொட்டு எண்ணற்ற யுகங்களிலும் அழிவற்று விளங்குபவர் என்பதையும் இத்திருநாமம் குறிக்கிறது. 24

ॐ कामारये नमः ஓம் காமாரயே நம:

மன்மதனை எரித்து அழித்தவர்; மனதில் தோன்றும் காமங்களையெல்லாம் அழித்து வைராக்கியத்தைத் தோற்றுவிப்பவர். 25

ॐ अन्धकासुरसूधनाय नमः ஓம் அந்தகாஸுரஸூதனாய நம:

அந்தகாஸுரனை அழித்தவர். 26

ॐ गङ्गाधराय नमः ஓம் கங்காதராய நம:

பகீரதன் என்னும் அரசன் மேலுலகத்திலிருந்து இப்பூவுலகிற்குக் கங்கைநதியைக் கொணர்ந்த போது அதன் வேகத்தைத் தனது ஜடையில் தாங்கியவர். சிவமெருமான் தன்னுடைய பக்தனுக்கிரங்கி மற்ற தேவர்களால் செயற்கரிய செயலைச் செய்பவர் என்பதை இத்திருநாமம் விளக்குகிறது. 27

ॐ ललाटाक्षाय नमः ஓம் லலாடாக்ஷாய நம:

நெற்றியில் கண்ணை உடையவர்; மற்றெல்லா உயிரினங்களைப் போலல்லாமல் அவற்றின் வேறாய், அவற்றிற்கெல்லாம் மேலானவனாய் விளங்குவதையே இத்திருநாமம் குறிக்கிறது. 28

ॐ कालकालाय नमः ஓம் காலகாலாய நம:

காலத்திற்கெல்லாம் தலைவனான யமனுக்கே தலைவனானவர். காலத்தைத் தன்னுள் அடக்கி மஹாபிரளயகாலத்தில் தான் ஒருவரே எஞ்சியிருப்பவர் என்றும் பொருள்படும். 29

ॐ कृपानिधये नमः ஓம் க்ருபாநிதயே நம:

கருணைக்கடல்; மற்றவர்களின் துன்பத்தைச் சிறிதளவும் பொறாமல் அதைக் களைபவர். 30

ॐ भीमाय नमः ஓம் பீமாய நம:

எல்லாப் பூதங்களுக்கும் தலைவனாய், நிலம், நீர் ,காற்று முதலியன தன் தண்டனைக்குப் பயந்து, தத்தம் தொழிலைத் தவறாமல் செய்யுமாறு அவற்றை அடக்கி ஆள்பவர். 31

ॐ परशुहस्ताय नमः ஓம் பரசுஹஸ்தாய நம:

பரசு என்னும் ஆயுதத்தைத் தாங்கியவர். 32

ॐ मृगपाणये नमः ஓம் ம்ருகபாணயே நம:

மானைத் தன் கையில் தாங்குபவர். பிக்ஷாடன உருவம் கொண்டு தாருகாவனத்தில் பெருமான் சென்ற போது முனிவர்கள் ஆபிசாரம் செய்து மானைப் பெருமானை நோக்கி ஏவியபோது அதைத் தனது கையில் ஏந்தியவர். மான் என்னும் சொல்லால் வேதங்கள் குறிக்கப்படும். எனவே வேதங்களைத் தனது கையில் கொண்டவர் என்பதையும் இத்திருநாமம் குறிக்கிறது. 33

ॐ जटाधराय नमः ஓம் ஜடாதராய நம:

ஜடையைத் தரித்தவர்; பெரும்பான்மை புண்ணிய நதிகள் குலாசலம் என்னும் மலையில் உற்பத்தியாகுபவை. சிவபெருமானின் ஜடையானது அம்மலைகளைக் குறிப்பதால் எல்லா புண்ணிய தீர்த்தங்களுக்கும் ஆதாரமானவர் என்பதையும் இத்திருநாமம் குறிக்கிறது. 34

ॐ कैलासवासिने नमः ஓம் கைலாஸவாஸினே நம:

எல்லாவித கேளிக்கைகளுக்கிருப்பிடமாய் விளங்குவதாலும், எப்போதும் ஆனந்தமயமாய் இருப்பதாலும், கைலாஸமென்பது சிவபெருமானுடைய வசிக்குமிடமாய்த் திகழ்கிறது. எனவே சிவபெருமான் கைலாஸவாஸீ எனப் போற்றப்படுகிறார். 35

ॐ कवचिने नमः ஓம் கவசினே நம:

தன்னிச்சையாயும், சுதந்திரமாயும் செயல்படுவதால் சிவபெருமான் கவசத்தையுடையவர் எனப் போற்றப்படுகிறார். 36

ॐ कठोराय नमः ஓம் கடோராய நம:

கோரமான உருவத்தை உடையவர்; சிவபெருமானுக்கு மிக அழகான உருவமொன்றும், மிகக் கொடூரமான

உருவமொன்றும் உள்ளது என வேதங்கள் பறைசாற்றுகின்றன. பயங்கரமான உருவம் கொண்டு பெருமான் உலகங்களைக் காக்கிறார். பூரணமாக விளங்குபவர் என்றும் பொருள்படும். 37

ॐ त्रिपुरान्तकाय नमः ஓம் த்ரிபுராந்தகாய நம:

முப்புரங்களை அழித்தவர்; தூலசரீரம், சூக்குமசரீரம், காரணசரீரமென்னும் மூன்றிலிருந்தும் பசுக்களாகிய ஜீவர்களை விடுவித்து சிவஞானத்தை வழங்குபவர். 38

ॐ वृषाङ्काय नमः ஓம் வ்ருஷாங்காய நம:

இடபக்கொடியை உடையவர்; இடபம் தர்மத்தைக் குறிப்பது. எனவே, தர்மங்களையே தன்னுடைய அடையாளமாகக் கொண்டவர். 39

ॐ वृषभारूढाय नमः ஓம் வ்ருஷபாரூடாய நம:

இடபத்தைத் தன் வாஹனமாகக் கொண்டு அதன் மேல் வீற்றிருப்பவர். 40

ॐ भस्मोद्धूलित विग्रहाय नमः

ஓம் பஸ்மோத்தூலிதவிக்ரஹாய நம:

அனைத்துப் பாவங்களையும், நீக்குவதும், மும்மலங்களையும் அழிக்கவல்லதும், மங்கலங்களை யெல்லாம் அளிப்பதுமான திருநீற்றை உடல் முழுதும் பூசுபவர். 41

ॐ सामप्रियाय नमः ஓம் ஸாமப்ரியாய நம:

ஸாமவேதத்தை மிகவும் விரும்புபவர்; அவ்வாறே, வேதங்கள் எல்லாவற்றையும் விரும்புபவர். சங்கரா ! சாமவேதீ ! என்று தேவாரத்தில் சிவபெருமான் போற்றப்படுகிறார். இனிமையான சொல்லை விரும்புபவர் என்றும் பொருள்படும். 42

ॐ स्वरमयाय नमः ஓம் ஸ்வரமயாய நம:

பிரணவவடிவமானவர்; பிரணவமந்திரம் சிவபெருமானைக் குறிக்கும் மந்திரம். 43

ॐ त्रयीमूर्तये नमः ஓம் த்ரயீமூர்த்தயே நம:

ருக்,யஜுஸ், ஸாமம் என்னும் மூன்று வேதங்களின் வடிவாய் விளங்குபவர். 44

ॐ अनीश्वराय नमः ஓம் அநீச்வராய நம:

தனக்கு நிகராகவோ, தனக்கு மேலாகவோ எந்தவிதமான கடவுளோ இல்லாதவர்; சிவபெருமானுக் கொப்பான மற்றொரு கடவுள் எக்காலத்திலும் இல்லை. 45

ॐ सर्वज्ञाय नमः ஓம் ஸர்வஜ்ஞாய நம:

அனைத்தையும் அறிந்தவர். 46

ॐ परमात्मने नमः ஓம் பரமாத்மனே நம:

எல்லாவற்றிற்கும் மேலானவர்; அனைத்துப் பிரபஞ்சத்திற்கும் ஒப்பற்ற ஒரே கடவுள், தலைவர். அனைத்துப் பிரபஞ்சத்தையும் தோற்றுவித்துக் காத்துப் பின்னர் யாவற்றையும் தன்னுள் ஒடுக்கும் ஒரே பரம்பொருள். 47

ॐसोमसूर्याग्निलोचनाय नमः

ஓம் ஸோம்ஸூர்யாக்னிலோசனாய நம:

சூரியன், சந்திரன், அக்னி ஆகிய மூவரையும் தன் கண்களாகக் கொண்டவர். 48

ॐ हविषेनमः ஓம் ஹவிஷே நம:

அக்னியில் ஆஹுதி செய்யப்படும் பொருளாய் இருப்பவர்; எனவே, உலகிலுள்ள அனைத்துப் பொருளாகவும் விளங்குபவர். 49

ॐ यज्ञमयाय नमः ஓம் யஜ்ஞமாயாய நம:

யாகங்களின் வடிவமாகத் திகழ்பவர். 50

ॐ सोमाय नमः ஓம் ஸோமாய நம:

உமாதேவியுடன் எப்போதும் கூடியிருப்பவர்; யாகங்களில் ஆஹுதி செய்யப்படும் முக்கியப் பொருளான ஸோமரஸத்தைக் கொடுக்கும் ஸோமலதா என்னும் கொடியாய் விளங்குபவர். 51

ॐ पञ्चवक्त्राय नमः ஓம் பஞ்சவக்த்ராய நம:

ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்னும் ஐந்து திருமுகங்களைக் கொண்டவர். இவை ஐம்பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள், ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், புருஷன், பிரகிருதி, புத்தி, அஹங்காரம், மனம், என்னும் ஐவகைத் தத்துவங்கள், நிவிருத்தி, பிரதிஷ்டா, வித்யா, சாந்தி, சாந்த்யதீதா என்னும் ஐந்து கலைகள், பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன், மஹேசுவரன், ஸதாசிவன் என்னும் ஐந்து மூர்த்திகள், சிவஸாதாக்கியம், மூர்த்தஸாதாக்கியம், அமூர்த்தஸாதாக்கியம், கர்த்ருஸாதாக்கியம், கர்மஸாதாக்கிய மென்னும் ஐந்து ஸாதாக்கியங்கள் ஆகியவற்றின் வடிவமாய்த் திகழ்பவர். 52

ॐ सदाशिवाय नमः ஓம் ஸதாசிவாய நம:

முக்காலத்திலும் விளங்கும் ஸதாசிவவடிவமாய் விளங்குபவர். 53

ॐ विश्वेश्वराय नमः ஓம் விச்வேச்வராய நம:

அனைத்துப் பிரபஞ்சத்திற்கும் ஒப்பற்ற ஒரே இறைவனானவர். 54

ॐ वीरभद्राय नमः ஓம் வீரபத்ராய நம:

தக்ஷனுடைய வேள்வியை அழிக்கும் பொருட்டு சிவபெருமானால் தன்னுடைய கோபத்திலிருந்து உண்டாக்கப்பட்டவர் வீரபத்திரர். அந்த வீரபத்திரர் வடிவில் விளங்குபவர். 55

ॐ गणनाथाय नमः ஓம் கணநாதாய நம:

நந்தி, பிருங்கி, மஹாகாலர் முதலிய கணங்களுக்குத் தலைவர். 56

ॐ प्रजापतये नमः ஓம் ப்ரஜாபதயே நம:

பிரஜாபதி என்னும் ருத்திரவடிவமாய்த் திகழ்பவர். 57

ॐ हिरण्यरेतसे नमः ஓம் ஹிரண்யரேதஸே நம:

பொன்மயமான வீரியத்தை உடையவர்; அனைத்தையும் பொன்னாய் மாற்றக் கூடிய வீரியத்தை உடையவர். 58

ॐ दुर्धर्षाय नमः ஓம் துர்தர்ஷாய நம:

எவராலும் தாக்கமுடியாதவர்; எந்தவித ஆயுதங்களாலும் தாக்கி அழிக்கப்பட முடியாதவாறு பலம் பொருந்தியவர். 59

ॐ गिरीशाय नमः ஓம் கிரீசாய நம:

மலைகளுள் சிறந்த கைலாயமலைக்கு நாயகர். 60

ॐ गिरिशाय नमः ஓம் கிரிசாய நம:

கைலாயமலையில் வசிப்பவர். 61

ॐ अनघाय नमः ஓம் அநகாய நம:

எவ்விதக் குற்றமோ அல்லது பாவமோ அற்றவர். 62

ॐ भुजङ्गभूषणाय नमः ஓம் புஜங்கபூஷணாய நம:

பாம்புகளை அணிகலனாக அணிந்தவர். 63

ॐ भर्गाय नमः ஓம் பர்காய நம:

பாவங்களையெல்லாம் அறவே நீக்கி அழிப்பவர். காயத்ரீ மந்திரத்தின் உட்பொருளாய் விளங்குபவர். 64

ॐ गिरिधन्वने नमः ஓம் கிரிதன்வனே நம:

மலைகளில் உயர்ந்த மேருமலையை வில்லாகக் கொண்டவர். 65

ॐ गिरिप्रीयाय नमः ஓம் கிரிப்ரியாய நம:

கைலாஸம், மேரு, மந்தரம் முதலிய மலைகளில் மிகவும் விரும்பி வசிப்பவர். 66

ॐ कृत्तिवाससे नमः ஓம் க்ருத்திவாஸஸே நம:

கஜாஸுரனை அழித்து அவனுடைய தோலை ஆடையாகப் போர்த்தியவர். 67

ॐ पुरारातये नमः ஓம் புராராதயே நம:

தூலம், சூக்குமம், காரணம் ஆகிய மூப்புரங்களுக்கு எதிரியாய் அவற்றை நீக்குபவர். 68

ॐ भगवते नमः ஓம் பகவதே நம:

அனைத்துக்கும் தலைமை, எல்லையற்ற ஆற்றல், பரந்து விரிந்த புகழ், எல்லையற்ற் செல்வம், அனைத்தையும் அறியும் திறன், எல்லாவற்றிலும் பற்றற்றிருத்தல் என்னும் ஆறு தெய்வீக குணங்களையுடையவனானதால் சிவபெருமான் பகவான் எனப்படுகிறார். 69

ॐ प्रमथाधिपाय नमः ஓம் ப்ரமதாதிபாய நம:

புறச்சமயவாதிகளை வாட்டி அழிக்கும் கணங்களுக்குத் தலைவர். 70

ॐ मृत्युंजयाय नमः ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம:

தன்னை வணங்கிப் போற்றும் பக்தர்களை பிறப்பு இறப்பு என்னும் நோயிலிருந்து விடுவிப்பவர். 71

ॐ सूक्ष्मतनवे नमः ஓம் ஸூக்ஷ்மதநவே நம:

எளிதில் அறியப்படமுடியாத மிக சூக்குமமான வடிவம் பொருந்தியவர். 72

ॐ जगद्व्यापिने नमः ஓம் ஜகத்வ்யாபினே நம:

மூவுலகங்களிலும் வியாபித்து விளங்குபவர். 73

ॐ जगद्गुरवे नमः ஓம் ஜகத்குரவே நம:

எல்லா உலகங்களுக்கும் முதன்மையான குரு; உலகைப்படைத்த பிரஹ்மாவுக்கே எல்லா வேதங்களையும் கற்பித்தவர். 74

ॐ व्योमकेशाय नमः ஓம் வ்யோமகேசாய நம:

கங்கையைத் தன்னுடைய ஜடையில் தரித்தபோது அதன் வேகத்தால் ஆகாயம் முழுவதும் ஜடை வியாபித்தவிரிந்த கேசத்தையுடையவர் . 75

ॐ महासेनजनकाय नमः ஓம் மஹாஸேனஜனகாய நம:

தேவர்களுடைய மிகப் பெரிய சேனைக்குத் தலவனான கந்தப்பெருமானுக்குத் தந்தையாக விளங்குபவர். 76

ॐ चारुविक्रमाय नमः ஓம் சாருவிக்ரமாய நம:

மனதிற்கு மகிழ்வளிக்கும் மிக அழகான வடிவம் உடையவர்.. 77

ॐ रुद्राय नमः ஓம் ருத்ராய நம:

அனைத்துத் துக்கத்திற்கும் காரணமான அஞ்ஞானத்தைப் போக்குபவர். எல்லா நோய்களையும் நீக்கி ஆரோக்கியத்தை அளிக்கும் சூரியவடிவானவர். 78

ॐ भूतपतये नमः ஓம் பூதபதயே நம:

பூதங்கள் எனப்படும் ஒருவித தேவக்கூட்டங்களின் தலைவனாய் அவர்களுடன் நடனம் புரிபவர். 79

ॐ स्थाणवे नमः ஓம் ஸ்தாணவே நம:

மரத்தைப் போல் அசையாமலும், சோதிவடிவாய் அசைவற்றும் விளங்குபவர். 80

ॐ अहिर्बुध्न्याय नमः ஓம் அஹிர்புத்ந்யாய நம:

பாதாள உலகத்தினின்றும் தோன்றிய சேஷன் என்னும் நாக வடிவமாய் இருப்பவர். 81

ॐ दिगम्बराय नमः ஓம் திகம்பராய நம:

தாருகாவனத்தில் முனிவர்களின் பக்திஸ்யச் சோதிக்கும் பொருட்டு எந்த ஆடையுமின்றிச் சென்றவர். 82

ॐ अष्टमूर्तये नमः ஓம் அஷ்டமூர்த்தயே நம:

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்கள்; சந்திரன், சூரியன், ஆன்மா என்னும் எட்டு வடிவமாய்த் திகழ்பவர். 83

ॐ अनेकात्मने नमः ஓம் அநேகாத்மனே நம:

இந்தப் பிரபஞ்சத்தையே தன் உடலாகக் கொண்டு அதனை இயக்கும் ஆன்மாவாக விளங்குபவர். 84

ॐ सात्विकाय नमः ஓம் ஸாத்விகாய நம:

ரஜோகுணம், தமோகுணம் ஆகியன நீங்கி முழுதும் ஸத்துவமயமாக விளங்குபவர். 85

ॐ शुद्धविग्रहाय नमः ஓம் சுத்தவிக்ரஹாய நம:

மாசற்ற மணியாகச் சுத்தமான வடிவம் கொண்டவர். 86

ॐ शाश्वताय नमः ஓம் சாச்வதாய நம:

எக்காலத்திலும் அழிவற்று நிலையாக இருப்பவர். 87

ॐ खण्डपरशवे नमः ஓம் கண்டபரசவே நம:

கஜாஸுரனைத் தாக்கியபோது உடைந்த பரசு என்னும் ஆயுதத்தை உடையவர். 88

ॐ अजाय नमः ஓம் அஜாய நம:

பிறவா யாக்கையை உடையவர்; பிறப்பு, இறப்பு அற்றவர். 89

ॐ पाशविमोचकाय नमः ஓம் பாசவிமோசகாய நம:

பசுக்களாகிய உயிர்களை அவற்றின் பாசப் பிணைப்பிலிருந்து விடுவிப்பவர். 90

ॐ मृडाय नमः ஓம் ம்ருடாய நம:

எல்லா உயிர்களுக்கும் சுகத்தையே கொடுப்பவர். 91

ॐ पशुपतये नमः ஓம் பசுபதயே நம:

அனைத்து உயிர்களுக்கும் ஒரே தலைவன். 92

ॐ देवाय नमः ஓம் தேவாய நம:

உலகங்களைப் படைத்தல் முதலான ஒப்பற்ற செயல்களைச் செய்யும் ஆற்றல் கொண்டவர். 93

ॐ महादेवाय नमः ஓம் மஹாதேவாய நம:

எல்லாவற்றையும் வியாபித்து நிற்கும் ஆற்றல் கொண்டு, ஏனைய தேவர்களுக்கெல்லாம் தலையாய தேவர். 94

ॐ अव्ययाय नमः ஓம் அவ்யயாய நம:

பிறப்பு, இறப்பு, தோற்றம், மறைவு, வளர்ச்சி, அழிவு என எந்தவிதமான மாற்றமுமில்லாதவர். 95

ॐ हरये नमः ஓம் ஹரயே நம:

பாவங்களையெல்லாம் அழிப்பவர். 96

ॐ पूषदन्तभिदे नमः ஓம் பூஷதந்தபிதே நம:

வீரபத்திர உருவம் தாங்கி தக்ஷனுடைய வேள்வியை அழித்தபோது பூஷன் எனப்படும் சூரியனின் பற்களை உடைத்தவர். 97

ॐ अव्यग्राय नमः ஓம் அவ்யக்ராய நம:

எவ்விதக் குழப்பமோ அல்லது சலனமோ அற்ற மனதை உடையவர். 98

ॐ दक्षाध्वरहराय नमः ஓம் தக்ஷாத்வரஹராய நம:

தக்ஷனுடைய வேள்வியை அழித்தவர். 99

ॐ हराय नमः ஓம் ஹராய நம:

எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்குபவர். 100

ॐ भगनेत्रभिदे नमः ஓம் பகநேத்ரபிதே நம:

தக்ஷனுடைய வேள்வியை அழிக்கும் போது பகன் எனப்படும் தேவனின் கண்களைக் குத்தி அவற்றை நீக்கியவர். 101

ॐ अव्यक्ताय नमः ஓம் அவ்யக்தாய நம:

வாக்கிற்கும் மனதிற்கும் எளிதில் எட்டாதவர். 102

ॐ सहस्राक्षाय नमः ஓம் ஸஹஸ்ராக்ஷாய நம:

எல்லாவற்றிலும் வியாபித்து விளங்குவதால் கணக்கற்ற புலன்களை உடையவர். 103

ॐ सहस्रपदे नमः ஓம் ஸஹஸ்ரபதே நம:

அனைத்து ஜீவராசிகளின் ஆன்மாவினுள் நிறைந்து விளங்குவதால் கணக்கற்ற கால்களைக் கொண்டவர். 104

ॐ अपवर्गप्रदाय नमः ஓம் அபவர்கப்ரதாய நம:

வீடுபேறாகிய மோக்ஷத்தை அளிப்பவர். 105

ॐ अनन्ताय नमः ஓம் அநந்தாய நம:

இப்படிப்பட்டவர், இவ்வாறு விளங்குபவர் என அறுதியிட்டுக் கூற இயலாத குணம் உடையவர்; முடிவு அற்றவர். 106

ॐ तारकाय नमः ஓம் தாரகாய நம:

ஸம்ஸாரக்கடலினின்றும் கடக்கச் செய்பவர்; மோக்ஷத்தை நல்கும் பிரணவமந்திரத்தைச் காசிப் பதியில் இறக்கும் உயிர்களின் காதில் ஓதுபவர். 107

ॐ परमेश्वराय नमः ஓம் பரமேச்வராய நம:

ஒப்புயர்வற்ற எல்லாவற்றிற்கும் மேலான ஒரே கடவுள். 108

ॐ नमः शिवाय

श्री शिवरहस्यान्तर्गता शिवाष्टोत्तरशतनामस्तोत्रकल्पलता ॥
श्री भास्कररायाग्निचिद्विरचितरत्नावालाख्यया व्याख्यया च संवलिता ॥

मोक्षस्यैकनिदानमज्ञनयनब्रह्मेन्द्रचन्द्रादिभि-
र्देवैः प्राणपदीकृतं कलिमलप्रध्वंसिधर्माङ्कुरः ।
भारत्यापि सुदुर्निरूपमहिम त्र्यय्यन्तरे गोपितं
वक्तुर्मङ्गलदं शिवेति विमलं नामैव नस्तारकम् ॥१ ॥

आनन्त्यौदार्यसत्याद्दतिमृतिहृतिभिः स्वल्पसेवातितोषात्
संकष्टोच्छित्त्युपेक्षाभयहितवचनैरुत्तमत्वाच्च शंभुः ।
सेव्यो विष्णूपमन्युद्रुहिणमुनिसुतश्रीदमन्थेच्छुदेवै-
र्दक्षश्रीरामवेदैरशिशुपशुवधूराक्षसैः साक्षिभिर्नः ॥२ ॥

नाथ त्वच्छक्तितत्त्वाव्ययचरितभगव्यूहमूर्त्यङ्गसाङ्ग-
प्रत्यङ्गोपाङ्घाकृत्यागमभजनकलांशादिनिष्कर्षमूढाः ।
त्वन्नामापि त्यजामो यदि दुरितहरं सान्ववायाः कृतार्थाः
केनोपायेन जायेमहि कलिहतके जन्मभाजो वयं हि ॥३ ॥

शिवेति द्वौ वर्णौ परपदपतद्धंसगरुतौ
तटौ संसाराब्धेः स्वविषयकबोधाङ्कुरदले ।
श्रुतेरन्तर्गोपाय्यततररहस्याहृतिचरो
घरट्टग्रावाणौ भवविटपिबीजौदृदलने ॥४ ॥

स्वामिन् कर्मणि कायिके न जरया शक्तोऽस्मि नो मानसे
चाञ्चल्यान्मनसो न निर्धनतया पूर्वेष्टदानादिके ।

तस्माद् वाचिकमेव कर्म विदुषां साध्यं विदित्वा भव-
न्नाम्नामष्टशतं निरुच्य जनुषः साफल्यमीहेतमाम् ॥५॥

शिवनामकल्पवल्ल्याः शिवचरितानन्दकाननभवायाः ।
रुचिरं रत्नावालं रचये सत्पद्यरत्नवरैः ॥६॥

इत्युपोद्घातः ॥

अथ नामावलिः -

ॐ शिवाय नमः ॥

प्रकृत्या नैर्मल्यादमलगुणयोगादपि शमा-
ज्जगत्याधारत्वाद् भजदमृतदानाच्च भवतः ।
बलादिच्छाशक्तेः प्रथितपुरि भद्रश्रव इति
प्रतीतस्त्वं लिङ्गे त्रिपुरहर तस्मादसि शिवः ॥१॥

ॐ महेश्वराय नमः ॥

तवेश्वरत्वं त्रिजगद्विलक्षणं
त्वमीश्वराणां महतामपीश्वरः ।
जगत्तिरोधानकरः श्रुतीरित-
स्त्वं पञ्चविंशोऽपि परो महेश्वरः ॥२॥

ॐ शंभवे नमः ॥

शं भावयसि च भवसे शं भवसि चेति वा देवः ।
त्वं देवदारुविपिने लिङ्गे प्रथितोऽस्यतः शंभुः ॥३॥

ॐ पिनाकिने नमः ॥

नाकोऽपि येन पिहितो मुनिकण्वमूर्ध-
वल्मीकवेणुजधनुस्त्रितयाग्रजन्मा ।

यः सप्तशीर्षफणिरूप उदारकर्मा
चापस्तमावहसि नाथ ततः पिनाकी ॥४॥

ॐ शशिशेखराय नमः॥

मतिमयोऽखिलजीवसमष्टिर-
प्यमथि दक्षमखे हिमगुर्वृथा।
इति धिया दयया विधृतस्त्वया
शिरसि तेन भवान् शशिशेखरः ॥५॥

ॐ वामदेवाय नमः॥

वामार्धेन क्रीडसि त्वं त्रिलोकी-
वक्राचारो वल्गुमोदोऽसि तस्मात्।
विश्वोत्तीर्णः स्रष्टृतामप्यतीतः
प्रेयानात्मा कथ्यते वामदेवः ॥६॥

ॐ विरूपाक्षाय नमः॥

विषमाणि विविधशक्तीन्यक्षाणि विलक्षणानि वाक्षाणि।
हर हेमकूटशैले लिङ्गे व्यक्तोऽस्यतो विरूपाक्षः ॥७॥

ॐ कपर्दिने नमः॥

नदीपूरैः शोधादथ सुरधुनीशोधनात् तत्प्रदानात्
कचग्रन्थेर्भेदोऽतिशयितगुणः स्यात् कपर्दो वराटः।
तदाधारः पूरस्थगनमपि तत्पावनं तत्प्रकाश-
क्षमत्वं भैरालीं प्रथयसि तनुं छालगण्डे कपर्दी ॥८॥

ॐ नीललोहिताय नमः ॥

नेमाङ्गनं प्रकृतिपूरुषं रवे-
रत्नश्च रूपयुगपद्धपुस्तव ।
वेधोऽलिकाम्बुकणतोऽरुणासिता-
ज्जातः शिवत्वमिति नीललोहितः ॥९॥

ॐ शंकराय नमः ॥

कर एव मुखे धत्से भक्तानां कुरुषे च तत् ।
पीठे चन्द्रपु राभिख्ये नाम्ना ख्यातोऽसि शंकरः ॥१०॥

ॐ शूलपाणये नमः ॥

शिव तृप्तपुरस्थलिङ्गमध्ये
प्रकटः संस्त्रिगुणात्मकाललोकैः ।
शुचिभक्तिदशादिभिस्त्रिशूलं
विदधंस्त्वं प्रथितोऽसि शूलपाणिः ॥११॥

ॐ खट्वाङ्गिने नमः ॥

द्रुहिणस्यैकं वदनं मिथ्यावचनं दृष्ट्वा सद्यश्छिन्नं
न ततो वेधोमरणं शम्भोः क्व पुनर्हिंसाजन्यं पापम् ।
अथ दण्डार्धं वहसि त्वं तज्जनशिक्षार्थं खट्वाया वा
चरणं यत् तद्विमलं सत्त्वं प्रथितस्तेन त्वं खट्वाङ्गी ॥१२॥

ॐ विष्णुवल्लभाय नमः ॥

वितरन् हरतें तपस्यते पदरेखाजनितं सुदर्शनम् ।
वपुरर्धमपि प्रियाय ते प्रथितस्त्वं भुवि विष्णुवल्लभः ॥१३॥

ॐ शिपिविष्टाय नमः ॥

पशवः परमात्मनि धीविरहात्
द्विपदोऽपि नराश्च सुराः शिपयः ।

तदनुग्रहकृद्धृदयं प्रविशन्
प्रथितोऽसि विभो शिपिविष्ट इति ॥१४॥

ॐ अम्बिकानाथाय नमः॥

नाथसि हिमाचलमुमां
मनसा तां नाथसेऽथवा नाथः।
प्रकटोऽसि देविकायां
लिङ्गे तेनाम्बिकानाथः ॥१५॥

ॐ श्रीकण्ठाय नमः॥

क्ष्वेलं गङ्गामिन्दोर्लेखामाद्योत्थां वा कान्तिं कण्ठे।
विभ्रन् माण्डव्येशे लिङ्गे विख्यातोऽसि त्वं श्रीकण्ठः ॥१६॥

ॐ भक्तवत्सलाय नमः॥

दासानुरस्यावपसीति तर्णकान्
भक्तात्मकानोदनबालकोभयम्।
पोषाय गृह्णास्यथ सौहृदं
पुष्णासि तस्मादसि भक्तवत्सलः ॥१७॥

ॐ भवाय नमः॥

सत्तामात्रमधिष्ठानमुपादानमसि विश्वस्य।
सलिलस्याधिष्ठात्री मूर्तिस्तव तेन विश्रुतोऽसि भवः ॥१८॥

ॐ शर्वाय नमः॥

यदेतदाभाति बहुप्रकारं
जगत्तदन्ते सकलं शृणासि।
अधिष्ठितो मध्यमदेशलिङ्गे
धरण्यधिष्ठातृतयापि शर्वः ॥१९॥

ॐ त्रिलोकेशाय नमः ॥

ऊर्ध्वाधोमध्यभुवाममरासुरमानवप्रकरनिबिडानाम् ।
अन्तर्यमनात् त्रिपुटीसाक्षितया शङ्कर त्रिलोकीशस्त्वम् ॥२० ॥

ॐ शितिकण्ठाय नमः ॥

दधदधिगलमिन्द्रपविप्रहृतिप्रभवं कालम् ।
कालंजरगिरिशिखरे प्रथितस्त्वं शितिकण्ठः ॥२१ ॥

ॐ शिवाप्रियाय नमः ॥

मतिर्धृतिः कृतिर्बलं शरीरमिन्द्रियं मनः ।
समस्तमेव ते शिवा भवानतः शिवाप्रियः ॥२२ ॥

ॐ उग्राय नमः ॥

उच्यस्यन्तर्निखिलजनानामुद्गच्छस्यप्यथ जगदूर्ध्वम् ।
प्रव्यक्तः सन् कनखललिङ्गे वायोरन्तर्वससि तदुग्रः ॥२३ ॥

ॐ कपालिने नमः ॥

कमलभवकरोटिव्रातमालाधरत्वात्
तदधिकबलशाली भासि कङ्कालमाथः ।
परशिव करवीरक्षेत्रमध्यस्थलिङ्गे
निवससि सुरवन्द्यो नामतस्त्वं कपाली ॥२४ ॥

ॐ कामारये नमः ॥

कर्पूरश्वेत त्वं कामेच्छोदूरे निष्कामानामासन्नः ।
दर्पं कन्दर्पस्य प्रक्षिण्वन् विख्यातोऽभूल्लोके कामारिः ॥२५ ॥

ॐ अन्धकासुरसूदनाय नमः ॥

लीलया जगदम्बया पिहितेषु ते नयनेष्वभू-
दन्धकारत एव यः स तु भैरवेण निषूदितः ।
तादृशः कृपया त्वया शिव गाणपत्यमवापितः
प्रेमवानपि नामतः पुनरन्धकासुरसूदनः ॥२६॥

ॐ गङ्गाधराय नमः ॥

अमरतटिनी निजं बलमेवेक्ष्य गर्वाद्भव-
च्छिरसि गगनादपीपदतीव वेगोद्धुरा ।
पटुतरजटाटवीमुपगता न दृष्टा क्वचित्
परमशिव तां दधन्निगदितोऽसि गङ्गाधरः ॥२७॥

ॐ ललाटाक्षाय नमः ॥

उडुरविशशिसंहर्ता प्रलयसमयसप्तार्चिः ।
तमुपरि नयने बिभ्रद् भव भवसि ललाटाक्षः ॥२८॥

ॐ कालकालाय नमः ॥

मार्कण्डेयः कालमुखाद् विमुक्तो
दग्धो रुद्रः काल इति प्रसिद्धः ।
तुर्यां मूर्तिं बिभ्रदुमाधिनाथ
प्रख्यातोऽसि त्वं भुवि कालकालः ॥२९॥

ॐ कृपानिधये नमः ॥

दैतेयेषु जलंधरादिषु
स्वीयानामपकारकेष्वपि
सालोक्यानि पदानि दित्ससि
त्वं ख्यातोऽसि ततः कृपानिधिः ॥३०॥

ॐ भीमाय नमः ॥

भिया वातो वाति ज्वलनदिनकरौ शक्रमृत्युप्रचेतो-
मुखा देवास्त्वत्तो भवचकितहृदस्तत्पराः स्वस्वकार्ये ।
नभोऽधिष्ठात्री ते तनुरिति विपुला सप्तगोदावरे च
प्रतीतस्त्वं लिङ्गे गिरिवरतनयानाथ तेनासि भीमः ॥३१ ॥

ॐ परशुहस्ताय नमः ॥

अमाघचरितत्वं व्यनक्ति परशुस्ते ।
शिवागमवचोभिस्ततः परशुहस्तः ॥३२ ॥

ॐ मृगपाणये नमः ॥

दारुवनस्थैस्त्वाभिचरद्भिः प्रेषित एणो वेदशरीरः ।
याचनमुद्रा वा तव हस्ते तत्प्रथितोऽसि त्वं मृगपाणिः ॥३३ ॥

ॐ जटाधराय नमः ॥

विविधतनुको दक्षध्वंसे बभूविथ यः पुरा
मृगमनुययाचे कोऽन्यस्तु स्थितो मखमण्डपे ।
अखिलसरितः पारावारान् पवित्रतरान् धरान्
शिरसि कचतापन्नान् बिभ्रच्छुतेऽसि जटाधरः ॥३४ ॥

ॐ कैलासवासिने नमः ॥

हरेर्मूर्ध्नि मेरौ हिमे मन्दराद्रौ
भवत्केलिभूम्यो भवत्कर्मगम्याः ।
तदूर्ध्वं परा ज्ञानलभ्यास्ति तासु
स्थितत्वेन जातोऽसि कैलासवासी ॥३५ ॥

ॐ कवचिने नमः ॥

वर्माभावे परशरनयनैः स्पृश्यो दृश्यो भवति हि सकलः।
स्वातन्त्र्येण द्वयमपि तिरयन् दुष्प्रापत्वाद् भवसि कवची ॥ ।३६ ॥

ॐ कठोराय नमः ॥

घोरैका ते तनुरन्या शिवेति
द्वे ते बिभ्रज्जगतां रक्षकोऽसि।
दुष्टा जीवा दमनेनैव रक्ष्याः
पूर्णत्वाद्वा कथितस्त्वं कठोरः ॥३७ ॥

ॐ त्रिपुरान्तकाय नमः ॥

स्थूलं लिङ्गं कारणमिति यत् त्रयं वपुषां नृणां
भक्तानां चेत् तदखिलमपि त्वमन्तयसि क्षणात्।
यद्वा नाथ त्रिपुरदहनादलौकिकचर्यया
श्रीशैलेऽसि प्रथिततनुमानिति त्रिपुरान्तकः ॥३८ ॥

ॐ वृषाङ्काय नमः ॥

त्वं गवामनयतः कुपितोऽपि
प्रार्थितोऽसि सुकृतेन वृषेण।
तेन तद्ध्वजरथो वृषशैले
विश्रुतोऽस्युभयथापि वृषाङ्कः ॥३९ ॥

ॐ वृषभारूढाय नमः ॥

नन्द्यारोहात् त्रैपुरदाहे हरिणा पृष्ठे
वेदाश्वानां गोवृषरूपेण समूढत्वात्।
धर्मज्ञानैश्वर्यविरागेषु निरूढत्वाद्
विख्यातोऽसि त्वं सुरवृन्दे वृंषभारूढः ॥४० ॥

ॐ भस्मोद्धूलितविग्रहाय नमः ॥

स्वाङ्गे भस्म विलिम्पन्नाथ
ज्ञानाङ्गशिरोव्रतमुपदिशसि ।
भूतेशाभिधतीर्थेऽपि त्वं
भस्मोद्धूलितविग्रहनामा ॥४१ ॥

ॐ सामप्रियाय नमः ॥

चन्दनस्पर्शशीतामृतस्यन्दिनी
सान्त्ववाक् सामवेदोऽथ सामानि वा ।
तैः प्रयुक्तैरतीवेश संप्रीयसे
गीयसे तेन लोकेषु सामप्रियः ॥४२ ॥

ॐ स्वरमयाय नमः ॥

षड्जोदात्तमुखाः स्वरा अवयवा वेदैकवपुषः
साम्ब व्यञ्जनको भवान् स्वरमयी शक्तिस्तव मता ।
ओंकारावयवेषु मप्रभृतयो रुद्रेश्वरशिवः
सर्वे यस्य विभूतितां विदधते सोऽपि स्वरमयः ॥४३ ॥

ॐ त्रयीमूर्तये नमः ॥

साम्ब ऋग्वेदकोऽस्यागलन्ता-
दा च नाभेर्यजुर्वेदरूपः ।
नाभिदेशादधः सामवेद-
स्तेन तेऽभूत् त्रयीमूर्तिनामा ॥४४ ॥

ॐ अनीश्वराय नमः ॥

ईश्वरत्वावधिर्यः स सर्वेश्वरः ।
तस्य नेशः परं त्वं ततोऽनीश्वरः ॥४५ ॥

ॐ सर्वज्ञाय नमः ॥

षड्विंशत्तत्त्वी त्वय्येवाध्यस्ता ।
सर्वाधिष्ठानं तत्त्वं सर्वज्ञः ॥४६॥

ॐ परमात्मने नमः ॥

अन्तर्यमयंस्त्वं भूतान्यखिलानि ।
भूयः कथितोऽसि श्रुत्या परमात्मा ॥४७॥

ॐ सोमसूर्याग्निलोचनाय नमः ॥

भास्वदादयो लोचनानि ते
मानसातिगं त्वां विदन्ति नो ।
भान्तमन्वमी भान्ति सांप्रतं
तेन सोमसूर्याग्निलोचनः ॥४८॥

ॐ हविषे नमः ॥

दुग्धमात्रस्य कुहरे यथा घृतं
प्राणिमात्रस्य दहरे तथा भवान् ।
चेतसा संमथित एव लभ्यते
हूयमानं त्वमखिलं ततो हविः ॥४९॥

ॐ यज्ञमयाय नमः ॥

वेदः पादो यूपो दंष्ट्रानलचयनरसनवदनस्तनूरुहधर्मकः
स्रौवश्चञ्चुः सर्पिर्नासो दिवसरजनिनयनयुगः करः सवनत्रयम् ।
औद्गात्रान्त्रो वेदीस्कन्धश्चरणयुगलमुपनिषदः प्रवर्ग्यकचभ्रमि-
र्वक्षोदाक्षिण्यो मन्त्रस्फिग्विधिमखकरणतनुकोऽसि यज्ञमयाभिधः ॥५०॥

ॐ सोमाय नमः ॥

मूर्तिस्त्वष्टास्वीश तवैका रजनीशो
ज्योतिष्टोमस्तस्य हविश्चैडविडश्च ।
सौराष्ट्रस्थस्त्वं शिव गङ्गायमुनस्थो
गौर्या साकं नित्यविहारीति च सोमः ॥५१ ॥

ॐ पञ्चवक्त्राय नमः ॥

सर्वेश ब्रह्मतत्त्वेन्द्रियविषयकलाभूतसादाख्यमूर्ति-
ष्वैकैकश्येन पञ्चात्मसु तव वदनेष्वादिहीनेषु सत्सु ।
योऽयं सुन्दोपसुन्दासुरहननिमित्ताप्सरस्तल्लजेक्षा-
प्रादुर्भावः स तद्भक्त्यतिरभसकृतेऽजायथाः पञ्चवक्त्रः ॥५२ ॥

ॐ सदाशिवाय नमः ॥

यो विधीश्वरदृशा सदाशिव-
स्तादृशोऽपि खलु यः सदाशिवः ।
तस्य कालकलना कृतस्तदि-
त्यौपचारिकतया सदाशिवः ॥५३ ॥

ॐ विश्वेश्वराय नमः ॥

केवलं चिन्मयज्योतिरात्मैव काशी
तेन सर्वाणि विश्वान्यतीतापि विश्वम् ।
तत्र वासात् परिच्छेदबुद्ध्या गृहीतः
काशिकाधीश्वरोऽपीश विश्वेश्वरस्त्वम् ॥५४ ॥

ॐ वीरभद्राय नमः ॥

श्रीगौर्या वीरः स्वीकृतः पुत्रबुद्ध्या
क्रोधग्निस्वेदोत्पादितो भद्रनामा ।

भद्रयोगाद्वा राजपूर्वासशाली
तद्वांस्तद्रूपस्त्वं ततो वीरभद्रः ॥५५॥

ॐ गणनाथाय नमः॥

शशिकरगुणमुखसंख्यानां
प्रमथतुषितमयमुख्यानाम्।
अधिपतिरसि शिव कैलासे
पुरि निवससि गणनाथस्त्वम्॥५६॥

ॐ प्रजापतये नमः॥

अन्तरिक्षभूमिनाकसंस्थिता
याः सहस्रशः सहस्रसंमिताः।
रुद्रनामिकाः प्रजाः सृजस्यतः
स्थाणुनामको भवान् प्रजापतिः॥५७॥

ॐ हिरण्यरेतसे नमः॥

त्वद्वीर्ययोगेन भवेद्धिरण्यं
यद्वाग्निरूपोऽस्यथवा जलार्धे।
त्यक्तेन वीर्येण बभूव हैम
मण्डं तदीशासि हिरण्यरेताः॥५८॥

ॐ दुर्धर्षाय नमः॥

कैलासे शिखरिणि पौलस्त्य
प्रागल्भ्यं तृणसमतामाप।
एवं सत्यभिभवकारी क-
स्तस्मात् त्वं भवसि हि दुर्धर्षः॥५९॥

ॐ गिरीशाय नमः ॥

भूरिगुणे पदवाक्ये निष्कलुषे सुसमर्थः ।
पर्वतराडपि शम्भो तेन मतोऽसि गिरीशः ॥६० ॥

ॐ गिरिशाय नमः ॥

मेरुपर्वतमसि धनुर्हेतवे कृशयसितराम् ।
पर्वते निवससि सुखं नाथ तद्भवसि गिरिशः ॥६१ ॥

ॐ अनट्टाय नमः ॥

दुःखं नाथ न ते पापं च व्यसनम् ।
त्रैलोक्याधिपते तस्मादस्यनघः ॥६२ ॥

ॐ भुजङ्गभूषणाय नमः ॥

अभिचारसमर्थदारुकावनगैः प्रहितानहीन् दधत् ।
गरुडादपि बिभ्यतस्तनौ कथितोऽसि भुजङ्गभूषणः ॥६३ ॥

ॐ भर्गाय नमः ॥

भर्ज्यन्ते दुरितानां संदोहा यदवाप्त्या ।
गायत्रीप्रतिपाद्यस्त्वं तस्मादसि भर्गः ॥६४ ॥

ॐ गिरिधन्वने नमः ॥

वाग्विषये त्वं मेरुरिव भवसि त्वां हि मनागभिवदति न वाचो
दिव्यरथे वा पुरदहनविधौ वेदमयाः किल चतुरतुरङ्गाः ।
चक्रयुगं ते दिनरजनिकरौ बाणशरीरभृदभवदुपेन्द्रो
मेरुरभूत् ते धनुरुरगपतिर्ज्याभवदीश तदसि गिरिधन्वा ॥६५ ॥

ॐ गिरिप्रियाय नमः ॥

प्रेम भूरि ते विभाति वैदिकस्तवात्मवाचि ।
सर्वपर्वतेष्वपीति नामतो गिरिप्रियोऽसि ॥६६ ॥

ॐ कृत्तिवाससे नमः ॥

वाराणस्यां शिव त्वद्भक्तांस्तुदन्तं गजेन्द्रं
विप्रोत्सृष्टाभिचारव्याघ्रं च शूलेन हत्वा ।
चर्मद्वन्द्वं तदीयं प्रावृत्य विभ्राजमानो
ऽस्येकाग्रे चन्द्रलेखामौले ततः कृत्तिवासाः ॥६७ ॥

ॐ पुरारातये नमः ॥

भवान् पूर्वमाभाति पश्चादिदं
जगद्भाति यद्वा पुराणामरिः ।
तनोः कारणस्थूलसूक्ष्मात्मनो
विनाशेन वा ते पुरारातिता ॥६८ ॥

ॐ भगवते नमः ॥

पराक्रममती विरागयशसी
श्रिया सह जगत्पतित्वमिति षट् ।
गुणा भवपदोचितास्त्वयि वसं
न्त्यतः श्रुतिगिरेरितोऽसि भगवान् ॥६९ ॥

ॐ प्रमथाधिपाय नमः ॥

मथ्नन्तितरां यदवैदिकांस्त्वत्पारिषदाः प्रमथा मताः ।
तानीश सदा परिपालयन् भक्तैरुदितः प्रमथाधिपः ॥७० ॥

ॐ मृत्युंजयाय नमः ॥

रुद्राच्युतेशब्रह्मणां कोट्यो यया गीर्णाः क्षणात्।
तद्गोचरो न त्वं विभो तेनाभावो मृत्युंजयः ॥७१॥

ॐ सूक्ष्मतनवे नमः ॥

दुर्ज्ञेयमूर्तिधरोऽप्यात्मातके प्रकटः।
सूक्ष्मादपीश कृशस्तेनासि सूक्ष्मतनुः ॥७२॥

ॐ जगद्व्यापिने नमः ॥

सत्ता भानं प्रियमिति चानुस्यूतं
सर्वेष्वर्थेष्वनुभवसिद्धं लोके।
सच्चित्सौख्यं त्रयमपि यौष्माकीणं
रूपं तस्मात् भवसि जगद्व्यापीति ॥७३॥

ॐ जगद्गुरवे नमः ॥

वटतरुनिकटे मुनीनखिलान् सुरान्
कमलभवमुखान् प्रबोधनमुद्रया।
उपदिशसि परं महस्तव दक्षिणा-
मुख परशिव तन्मतोऽसि जगद्गुरुः ॥७४॥

ॐ व्योमकेशाय नमः ॥

पृथ्वीपाथोज्वलनपवनव्योमरूपेषु भूते-
ष्वल्पाल्पानि प्रथमगदितान्युत्तराणीशितृणि।
व्योम्नोऽपीशोऽस्यथ च गगनं कुन्तलास्ते विराजो
गङ्गाधारा वियदिव जटास्तेन च व्योमकेशः ॥७५॥

ॐ महासेनजनकाय नमः ॥

सुब्रह्मण्येन पृष्टे प्रणवपरमार्थोऽत्र क इति
ब्रह्मण्यङ्गोक्षणे स्वं दिशति सति कारानियमिते ।
आत्मा वै पुत्रनामेत्युपदिशति तौ मोचितवति
त्वय्यङ्गाक्षाजपुत्रैः स्तुत इति महासेनजनकः ॥७६ ॥

ॐ चारुविक्रमाय नमः ॥

परशिव त्वया ये निषूदिता
गजजलन्धरत्रैपुरादयः ।
अपुनरागमं ते पदं गता-
स्तव चमत्कृतश्चारुविक्रमः ॥७७ ॥

ॐ रुद्राय नमः ॥

बालो धातृललाटाज्जातः सन्नरुदस्त्वं
सोऽरोदीद्यदरोदीदग्नित्वादपि रुद्रः ।
उल्लाट्टीकरणाद्वानिश्चिन्तीकरणाद्वा
संवर्ते रोदयसि ब्रह्मादीनिति रुद्रः ॥७८ ॥

ॐ भूतपतये नमः ॥

धरणीजलादिषु तथात्मगणे-
ष्वनुविश्य तान् नियमयंन् नटसि ।
अथवा पिशाचनिकरान्नटयन्
भुवनावनाय ननु भूतपतिः ॥७९ ॥

ॐ स्थाणवे नमः ॥

वृक्षाभः स्तब्धो दिवि भुवि पुर उद्दिश्य
स्फारं वर्षाणि स्थिरतर उदतिष्ठस्त्वम्।
ज्योतिर्लिङ्गेऽपि प्रभवति सति नैश्चल्यात्
कल्पान्ते वातैर्न चलसि तदसि स्थाणुः ॥८० ॥

ॐ अहिर्बुध्न्यायनमः ॥

ब्रह्माण्डस्याधो दशशतफणो बुध्न्यभावं प्रयाते
पाताले साधुर्वहति वसुधां सार्णवद्वीपशैलाम्।
तन्मूर्धभ्योऽन्ते विषमयंवपुः कालसङ्कर्षणाख्यो
रुद्रो भूत्वेदं दहसि निखिलं सोऽस्यहिर्बुध्न्यनामा ॥८१ ॥

ॐ दिगम्बराय नमः ॥

महेश दारुकावने महर्षिसिद्धसेविते
तदङ्गनाः पतिव्रताःपरीक्षमाणया धिया।
मनोभवाति शायिनीं मनोहरां दधत्तनुम्
उपागतस्तदाश्रमेषु भिक्षितुं दिगम्बरः ॥८२ ॥

ॐ अष्टमूर्तये नमः ॥

मेदिनी भूतमभिमन्यसे शर्व इति पाथसो भवपदेनाभिमानी
रुद्रनाम्ना तु वैश्वानरस्योग्र इति मारुतं भीम इत्यम्बरस्य।
भानुमीशान इति शीतभानुं महादेव इत्यात्मनो यज्वनो वा
मन्यसे पशुपतीभूय शम्भो जगद्व्याप्य तिष्ठन् भवत्यष्टमूर्तिः ॥८३ ॥

ॐ अनेकात्मने नमः ॥

यत् किंचिद् ब्रह्माण्डे सर्वं वै रुद्रस्तत्।
संख्येयत्ताभावाद् विख्यातोऽनेकात्मा ॥८४ ॥

ॐ सात्त्विकाय नमः ॥

त्वयि निवसति जन्तुरस्तिता-
गुण इति तानि तव प्रयोजनम् ।
त्वमपि भवसि तेषु तद्वपुः
परशिव तेन मतोऽसि सात्त्विकः ॥८५॥

ॐ शुद्धविग्रहाय नमः ॥

घनघृतमिव सत्त्वमात्रापिण्डो
न तु वपुरण्वपि ते रजस्तमोऽक्तम् ।
शिव भवसि न चैव कूटयोधी
हरसि मलानिति शुद्धविग्रहस्त्वम् ॥८६॥

ॐ शाश्वताय नमः ॥

पूर्वतो जगतो जनेः सर्वसंहारतः परे ।
वर्तमाने जगत्यपि त्वमस्येवेति शाश्वतः ॥८७॥

ॐ खण्डपरशवे नमः ॥

गजासुरवधे खण्डास्तव जाताः परशवः ।
तदारभ्याखिलैर्देवैर्गीयसे खण्डपरशुः ॥८८॥

ॐ अजाय नमः ॥

न जनिः शिव ते ।
तदसि त्वमजः ॥८९॥

ॐ पाशविमोचकाय नमः ॥

अभिमतिगुणपञ्चपरुर्दश-
त्रिचतुरयुतविंशतिपाशतः ।
शिवपदभजनेन विमोचयन्
पशुगणमिति पाशविमोचकः ॥९० ॥

ॐ मृडाय नमः ॥

यज्ञे पूर्णे सुहिते पूर्णाहुत्या त्वयि सुहिते ।
यष्टृन् ध्यातृनपि सुखयस्यायनितस्तदसि मृडः ॥९१ ॥

ॐ पशुपतये नमः ॥

ख्यातं तन्त्रेषु पाशः पशुरथ मतिरित्ययेतत् त्रयमपि
त्वद्रूपं नाथ जीवान्नियमसि नुतो मुक्तांश्च कुरुषे ।
ग्राम्यारण्याधिपत्यं वहसि च यजमानात्माभिमतिमान्
भक्तान् नेपालपीठे रमयसि निवसन्नासीः पशुपतिः ॥९२ ॥

ॐ देवाय नमः ॥

द्युतिमोदव्यवहारात् सुरजातिष्ववातरात् ।
शशिमौले जगतीनामधिपत्वादपि देवः ॥९३ ॥

ॐ महादेवाय नमः ॥

गीर्वाणानामपि मधुहादीनां
नमनीयः स्तवनीयस्त्वं देवः ।
शशिबिम्बेऽधिष्ठात्री तव मूर्ति-
र्जगदाप्यायतीति महादेवः ॥९४ ॥

ॐ अव्ययाय नमः ॥

न जायसे परिणमसि प्रवर्धसे
न हीयसे न च विकृतोऽसि नश्यसि ।
त्वमव्ययैर्दशभिरपि क्षमादिभिः
परिष्कृतः परशिव तेन चाव्ययः ॥९५॥

ॐ हरये नमः ॥

परशिव तव नामसंकीर्तनं
कलिकलिषितचेतसां पावनम् ।
निवससि नगरे हरिश्चन्द्रके
हरसि च दुरितानि स त्वं हरिः ॥९६॥

ॐ पूषदन्तभिदे नमः ॥

अधिमखं रदविकासपूर्वकं
परिहसन्तमवलोक्य पूषणम् ।
शिव भवानकृत पिष्टभागिनं
गलितदन्तमिति पूषदन्तभित् ॥९७॥

ॐ अव्यग्राय नमः ॥

पौलस्त्येनोन्नमनसमये कैलासार्द्रे-
र्ब्रह्माण्डानामपि दहनकाले संवर्ते ।
युद्धेष्वन्येष्वपि बहुषु संतोषोद्रेकाद्
देवीं पश्यन्नटसि शिव तस्मादव्यग्रः ॥९८॥

ॐ दक्षाध्वरहराय नमः ॥

पुरा देवो दक्षः शिव तवैकः श्वशुरकः
परो मर्त्यो दक्ष इति विटपिकन्योदरभवः ।
प्रचेतःपुत्रोऽखिलमखदातापि च भवां
स्तयोर्यज्ञौ हा व्यदलयदिति दक्षाध्वरहरः ॥९९॥

ॐ हराय नमः ॥

परशिव जनयसि भव इति भणितः
स्थिरमपि चरयसि मृडपदगणितः ।
चरमचरमपि चरमगुणधरः
प्रहरसि जगदिदमखिलमिति हरः ॥१०० ॥

ॐ भगनेत्रभिदे नमः ॥

विष्णुब्रह्माद्यखिलदिविषद्वृते मखमण्डपे
वीरं भद्रापतिमुपगतं सुरासुरमर्दनम् ।
कोपाटोपादरुणनयनो भगस्तमदीदृशत्
तन्नेत्रे स प्रसभमभिनत् ततो भगनेत्रभित् ॥१०१ ॥

ॐ अव्यक्ताय नमः ॥

सांख्ये मूलप्रकृतिरिति यदाचख्यौ यत्
पाराशर्योश्विदिति गदति तत्त्वं तत्त्वम् ।
सामष्टयं चाक्षरमपि भुवि नैष व्यक्तं
लिङ्गं वार्णाभिधमपि शिव इत्यव्यक्तः ॥१०२॥

ॐ सहस्राक्षाय नमः ॥

अगणितकरचरणशिरोदंष्ट्रोदरयुक्प्रतिभयमाश्चर्यं
युगपत् सृष्टिस्थितिलयकारि च यदवच्छेदकभेदेन ।
क्षेत्रे च सुवर्णाख्ये प्रथितं लिङ्गे शिव तव यद्रूपं
बहुविधकर्मज्ञानेन्द्रियपरिपूर्णं तदिति सहस्राक्षः ॥१०३॥

ॐ सहस्रपदे नमः ॥

जगदवनार्थमष्टसु धृतासु मूर्तिषु
स्मरहर भास्करस्य तव मूर्तिरष्टमी ।
गणनपथातिगाह्यिघ्रमयविश्वरूपधृत्
श्रुतिगदितोऽसि शंकर ततः सहस्रपात् ॥१०४॥

ॐ अपवर्गप्रदाय नमः ॥

प्रतीकविदहंग्रहो भृतक इत्युपास्तेर्निजाद्
विधेः शिवसलोकता शिवतदात्मता सार्ष्टिता ।
भवन्ति ससमीपता अमृततात्मविज्ञानतो
ऽखिलं फलमतो भवेदिति मतोऽपवर्गप्रदः ॥१०५॥

ॐ अनन्ताय नमः ॥

नात्रेति विभो नेदमित्थमिति नेदं
ब्रह्मेति न वाचो यत्र प्रसरन्ति ।
नास्त्येव गुणानामन्तो न विभूतेः
शेषोऽसि धराधृत् तेन त्वमनन्तः ॥१०६॥

ॐ तारकाय नमः ॥

तव पदकमले भजन्तो जनास्तारिता यत् त्वया
भवजलनिधितो महादेव ताराख्यवर्णात्मकः ।

प्रणवमुपदिशन् द्विजान् काशिकायां परेतानपि
श्रुतिषु निगदितस्तदन्वर्थनामाभवत् तारकः ॥१०७ ॥

ॐ परमेश्वराय नमः ॥

ग्रामाणां पतयोऽपि सोपपदेशरा भुवि भूरिश-
स्तेऽपि स्वाश्रितमात्रपोषपरास्तथैव दिवौकसः ।
ईशानामपि चेशितानि निजाश्रिताश्रिततच्छ्रितान्
सर्वानप्यवसीशतापरमावधिः परमेश्वरः ॥१०८ ॥

जानाति साम्ब तव धामरुचिं दधीचि-
र्जानाति ते पदनखाग्रबलं दशास्यः ।
जानाति दोर्बलपराक्रममेष मेरु-
र्जानन्त्यमोघपटुबाणगतिं पुराणि ॥१ ॥

इयं शंभोरष्टोत्तरशतकनामार्थविवृति-
र्विजातीयैरष्टोत्तरशतकवृत्तैर्विरचिता ।
फलं नामस्वर्थावगतिषु च भूम्नैव विहितं
बहूनां वृत्तानां प्रमितिरधिकाप्यत्र फलति ॥२ ॥

इति काशिनिवासिसाग्निचित्य-
क्रतुकृद् भास्कररायभारती ।
जनुषः सफलत्वसिद्धये
शिवनामाष्टशतं व्यवर्वरीत् ॥३ ॥

इति श्रीमत्पदवाक्यप्रमाणपारावारीणभारत्युपनामकश्रीगम्भीररायसूरिसूनुना श्रीभास्कररायाग्निचितोन्नीतं श्रीशिवाष्टोत्तरशतनामस्तोत्रकल्पलताव्याख्यानं रत्नावालं संपूर्णम् ॥